**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.186/2021**
**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : பார்த்தசாரதி | Caste | : |
| Father 's Name / Husband Name | : **மகாதேவன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(26.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது வேடர்புளியங்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் GRT ஜிவல்லரியில் வேலை செய்து வருகிறேன். கடந்த 02.01.2018ம் தேதி நான் எனது அம்மா, எனது தங்கை , அப்பா ஆகியோரும் மற்றும் எனது பெரியப்பா குடும்பத்தினரும் சாக்கிலிபட்டி ஊருக்கு சாமி கும்பிடுவதற்காக இருசக்கர வாகனத்தில் சென்றோம். 03.01.2018ம் தேதி திருவிழா முடிந்து நாங்கள் மாலை 7 மணியளவில் எங்களுக்கு சொந்தமான TN 59 BH 9663 பஜாஜ் என்ற வண்டியில் தனக்கன்குளம் High way பிரிவில் மேற்கிலிருந்து கிழக்காக வந்து கொண்டிருந்தோம். எனது அப்பா மகாதேவன் எனக்கு முன்பாக மேற்கிலிருந்து கிழக்காக ரோட்டைக் கடந்து செண்டர் டிவைடரில் மேற்கண்ட பஜாஜ் பிளாட்டினா வண்டியில் நின்று கொண்டிருந்தார். அந்த ரோட்டில் சமயநல்லூர் டு திருமங்கலம் நோக்கி ஒரு ஸ்கோடா ராபிட் வண்டி எண் TN 95 0909 என்ற வண்டி அதிவேகமாக வந்தும் எவ்வித ஒலியும் எழுப்பாமல் எனது அப்பா மீது நேரடியாக மோதிவிட்டது. மோதியதில் எனது அப்பா வண்டியில் தூக்கி வீசப்பட்டு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது.

இடதுகாலிலும் பெரிய காயம் ஏற்பட்டது. பின்பு நாங்கள் ஆம்புலன்சுக்கு போன் செய்தோம். அப்போதே எனது அப்பாவுக்கு மயக்கம் ஏற்பட்டது. எனதுஅப்பாவை எனது பெரியப்பா மகாராஜன் என்பவருடன் ஆம்புலன்சில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். பின்பு நானும் எனது நண்பர் வேல்பாண்டியும் ஆஸ்டின்பட்டி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். அப்பா மருத்துவமனைக்கு போகும் போதே இறந்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். புகாரில் உள்ள கையெழுத்தும் என்னுடையது தான். **மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது அப்பா TN 58 BH 9663 என்ற பஜாஜ் பிளாட்டினா இருசக்கர வாகனத்தில் தனியாக தான் சென்றார் என்றால் சரிதான். நான் அந்த சமயத்தில் வேறு ஒருவாகனத்தில் சென்றேன் என்றாலும் சரிதான். சம்பவம் நடந்ததை நான் நேரில் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வந்த காரின் கலர் என்னவென்றால் புளுகலர் ஆகும். புளு கலர் கார் என்று நான் போலிசார் விசாரணையிலும் புகாரிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்தவுடன் யார் ஆம்புலன்சுலுக்கு தகவல் சொன்னார்கள் என்றால் பக்கத்தில் உள்ளவர்கள் சொன்னார்கள். இந்த விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் வந்த வாகனத்தை பற்றி போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் மனுவில் உள்ள விபரங்கள் மற்றும் எழுத்துக்கள் என்னுடையது தானா என்றால் ஆமாம். அது எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் காவல் நிலையத்தில் வைத்து எழுதப்பட்டடது. சம்பவம் நடந்தயிடத்தில் நான் இல்லை என்றாலும் போலிசார் சொல்லி தான் எனக்கு விபரம் தெரியும் என்றாலும் அதனால் தான் என்னால் நான் வந்த வாகனத்தை குறிப்பிடவில்லை என்று சொன்னாலும் அதனால் தான் எதிரியின் வாகனத்தின் கலரை சொல்ல முடியவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்தில் இறந்துபோனவர் கெல்மட் அணியாமல்

அவராக சென்று டிவைடரில் மோதி விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் சரியல்ல.

**மறுவிசாரணை**. இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.186/2021**
**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : **மகாராஜன்** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **வீரபத்திரன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(26.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மதுரை கிருஷ்ணாபுரம் காலனியில் குடியிருந்து வருகிறேன். நான் நெல் வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 02.01.2018ம் தேதி நான் எனது குடும்பம் மற்றும் எனது தம்பி மகாதேவன் குடும்பம் மற்றும் எனது அண்ணன் குடும்பம் ஆகியோர்கள் குல தெய்வ கோவிலுக்கு சாக்கிலிபட்டிக்கு போய் இருந்தோம். மறுநாள் 03.01.2018ம் தேதி மாலை 7 மணிக்கு மேல் கிளம்பி மதுரைக்கு வந்துகொண்டிருந்தோம். எனது தம்பி மகாதேவன் எங்களுக்கு முன்பாக 10 மீ தூரத்தில் அவரது பைக்கிகில் சென்று கொண்டிருந்தார் .நான் எனது பைக்கில் பின்னாடி வந்து கொண்டிருந்தேன். எனது தம்பி மகன் பார்த்தசாரதி அவரது நண்பருடன் மற்றொரு பைக்கில் என்னுடன் வந்து கொண்டிருந்தார்கள். எங்கள் குடும்பத்தார் அனைவரும் பின்னாடி வேனில் வந்து கொண்டிருந்தார்கள். சமயநல்லூர் டு திருமங்கலம் பைபாஸ் ரோட்டில் தனக்கன்குளம் பைபாஸில் வடக்கிலிருந்து தெற்காக வ ந்த கருப்பு கலர் ஸ்கோடா கார் வந்து எனது தம்பி பைக் மீது மோதியதில் எனது தம்பி தூக்கிவீசப்பட்டு கீழே விழுந்தார். நான்

இதை பார்த்து ஓடி வ ந்து எனது தம்பி மகாதேவனை தூக்கவும் எனது அருகில் தம்பி மகன் பார்த்தசாரதியும் அவரது நண்பரும் வந்துவிட்டார்கள்.

எனது தம்பிக்கு தலை முழுவதும் இரத்தக்காயம் ஏற்பட்டது. காலிலும் அடிபட்டிருந்தது. அதற்குள் ஆம்புலன்சுக்கு போன் செய்து ஆம்புலன்சும் வந்துவிட்டது. நான் எனது தம்பியை ஆம்புலன்சில் மதுரை பெரிய ஆஸ்பத்திரிக்கு கூட்டி சென்றேன். அங்கு மருத்துவமனையில் மருத்துவர் சோதித்துவிட்டு அவர் இறந்துவிட்டதாக தெரிவித்தார்கள். சம்பவத்தன்று விபத்து ஏற்படுத்திய காரின் ஓட்டுனர் ஆஜர் எதிரி தான். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்துபோன எனது தம்பி சம்பவத்தன்று தலைக்கவசம் அணிந்திருந்தாரா என்றால் அணிந்திருந்தார். சம்பவத்தன்று விபத்து ஏற்படுத்தியதாக சொல்லும் காரின் நிறம் கருப்பு என்று நான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். விபத்தை ஏற்படுத்திய நபரின் விபரம் போலிசார் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் 2 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். சம்பவயிடத்தில் நான் இல்லை என்றாலும் அதனால் தான் காரின் விபரம் பற்றியும் மற்ற விபரம் பற்றியும் தெரியவில்லை என்றால் சரியல்ல. இறந்துபோன எனது தம்பி தலைக்கவசம் அணியாமல் அவராகவே தடுப்பு சுவரில் மோதி விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**. இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.186/2021**

**Prosecution Witnesses : 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : **வேல்பாண்டி** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **சின்னகாளை** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(26.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மதுரை கே.கே.நகரில் குடியிருந்து வருகிறேன். நான் ஜிவல்லரி கடையில் வேலை செய்து வருகிறேன். கடந்த 03.01.2018ம் தேதி நான் வழக்கம் போல் எனது நண்பர் பார்த்தசாரதியின் கோவிலுக்கு சென்றேன். பின்பு அன்று மாலை 7 மணியளவில் சாக்கிலிபட்டியில் இருந்து மதுரைக்கு திரும்பும் போது நானும் பார்த்தசாரதியும் ஒரு பைக்கிலும் வழக்கில் இறந்துபோன எனது நண்பர் அப்பா ஒரு பைக்கிலும் அவரது பெரியப்பா ஒரு பைக்கிலும் வந்து கொண்டிருந்தோம். அப்போது சமயநல்லூர் டு திருமங்கலம் பைபாஸ் ரோட்டில் தனக்கன்குளம் குறுக்கு சாலையில் பார்த்தசாரதியின் அப்பா குறுக்குசாலையின் நடுவில் கடப்பதற்காக வண்டியில் நின்று கொண்டிருந்தார். அப்போது சமயநல்லூரிலயில் இருந்து திருமங்கலம் வந்த ஸ்கோடா காரானது அதிவேகமாக வந்து ஒலி எழுப்பாமல் வந்து எனது நண்பரின் அப்பா மகாதேவன் மீது மோதியது. இடித்ததும் மகாதேவ ன் தூக்கி எறியப்பட்டார்.

நாங்கள் சென்று தூக்கும் போது அவருக்கு தலையிலும் இடதுபக்க காலிலும் இரத்தக் காயம் இருந்தது. பின்பு அருகில் உள்ள வர்கள் ஆம்புலன்சுக்கு போன் செய்து எனது நண்பரின் பெரியப்பா மகாதேவனை ஆம்புலன்சில் ஏற்றி மருத்துவமனைக்கு கொண்டு சென்றார். நானும் பார்த்தசாரதியும் காவல் நிலையம் சென்றோம். காவல் நிலையம் சென்றதும் எங்களுக்கு மருத்துவமனை மூலம் இறந்துவிட்டதாக தகவல் வந்தது.விபத்தை ஏற்படுத்திய நபரை நான் சரியாக பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவ சமயத்தில் நான் வாகனத்தில் சென்ற விபரத்தை பற்றி சொன்னேனா என்றால் வண்டியில் போனதை பற்றி சொன்னேன். ஆனால் வண்டியின் விபரத்தை பற்றி சொல்லவில்லை. நான் வண்டியில் சம்பவத்தன்று வரவில்லை என்பதால் தான் போலிசாரிடம் வண்டியின் விபரம் பற்றி சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் எத்தனை மணிக்கு எனது நண்பருடன் புகார் கொடுக்க சென்றோம் என்றால் 7 மணிக்கு சம்பவம் நடந்தது. ஆம்புலன்சு வந்து சென்றதும் நாங்கள் புகார் கொடுக்க சென்றோம். இறந்துபோன மகாதேவன் தலைக்கவசம் அணிந்திருந்தாரா என்றால் ஆமாம். விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் கலர் மற்றும் அதன் விபரம் குறித்து தெரியுமா என்றால் எனக்கு அதுகுறித்து தெரியாது. இறந்துபோன மகாதேவன் தலைக்கவசம் அணியாமல் அவராகவே தடுப்பு சுவரில் மோதி விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. விபத்து நடந்த சமயத்தில் நான் அங்கு இல்லாததால் தான் என்னால் விபரம் சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**. இல்லை